# 12.08.2022ம் திகதிய 53வது மாதாந்த சபைக்கூட்டம்

நேரம் : மு.ப 9.30 மணி
காலம் : 12.08.2022ம் திகதி வெள்ளிக்கிழமை
இடம் : சபா மண்டபம் தலைமை அலுவலகம்
தலைமை : கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன்

**கூட்டத்தில் பங்குபற்றியோர்**

- திரு.பத்மநாதன் மயூரன் - கௌரவ தவிசாளர்
- திரு.கணேசு முருகையா - கௌரவ உறுப்பினர்
- திரு.இராசையா இராசலிங்கம் - கௌரவ உறுப்பினர்
- திரு.செல்வநாயகம் சிவலோஷன் - கௌரவ உறுப்பினர்
- திரு.தெய்வேந்திரம் கிரிதரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கபிரியேல்பிள்ளை திருஞானராஜா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.ரவிதாஸ்.கோமதி - கௌரவ உறுப்பினர்
- திருமதி.சச்சிதானந்ததேவி செல்லத்துரை - கௌரவ உறுப்பினர்
- திரு.வல்லிபுரம் ஸ்ரீகணேசா - கௌரவ உறுப்பினர்
- திரு.சுப்பிரமணியம் விஜயகுமாரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.குமாரசாமி மதுசுதன் - கௌரவ உறுப்பினர்
- திரு.கந்தையா குகானந்தன் - கௌரவ உறுப்பினர்
- திருமதி.அழகேந்திரம் அகிலாண்டரூபி - கௌரவ உறுப்பினர்
- செல்வி.விஜயகுமார் சிந்துஜா - கௌரவ உறுப்பினர்
- திரு.வஸ்ரியாம்பிள்ளை சிறில்றூமன் விஜேந்திரன் - கௌரவ உறுப்பினர்
- திரு.சுந்தரேஸ்வரன் சுதர்ஜன் - செயலாளர்

**கூட்டத்திற்கு சமூகமளிக்காதோர்**

- திரு.தாமோதரம்பிள்ளை தியாகமூர்த்தி - கௌரவ உறுப்பினர்
- செல்வி.குலேந்திரன் பிரிந்தா - கௌரவ உறுப்பினர்
- திருமதி.வாசுகி சுதாகர் - கௌரவ உறுப்பினர்
- திரு.இராஜமனோகரன் ஜெயகரன் - கௌரவ உபதவிசாளர்
- திருமதி.கௌசலா சிவா - கௌரவ உறுப்பினர்

மேற்படி கூட்டமானது மு.ப 9.30 மணியளவில் கௌரவ தவிசாளர் திரு.ப.மயூரன் அவர்கள் தலைமையில் ஒரு நிமிட மௌன அகவணக்கத்துடன் கூட்டம் ஆரம்பமானது. அடுத்து சபைக்கீதம் இசைக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் அனைவருக்கும் வணக்கத்தினை தெரிவித்துக்கொண்டு நிகழ்ச்சி நிரலில் முதலாவது விடயம் சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரித்தல். 52வது மாதாந்த கூட்ட அறிக்கை (யூலை) சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/01**
11.07.2022ம் திகதிய 52வது மாதாந்த (யூலை) சபைக்கூட்ட அறிக்கை அங்கீகரிக்கப்படுகின்றது என கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து தவிசாளர் அறிவிப்பில் கௌரவ தவிசாளர் அவர்களினால் வாய்க்கால் தூர்வாருதல் மற்றும் புனரமைப்புக்கான விபரங்களை விரைவாக வழங்குமாறு கோரியதுடன் கடந்த 06 மாதங்களின் பின்னர் மின் விளக்கு திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன். அத்துடன் குறித்த பழுதுபார்த்தல் வேலையானது பிரதான வீதிகளில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பதனையும் சபையினருக்கு தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து கால அவசாகத்துடனான கேள்விகள். குறித்த விடயம் தொடர்பான கௌரவ உறுப்பினர் தற்போது சமூகமளிக்காதமையால் அதனை இடைநிறுத்தி அடுத்த விடயம் கால

அவகாசத்துடனான பிரேணை. பிரேரணை சமர்ப்பித்த கௌரவ உறுப்பினர் திருமதி.சு.வாசுகி அவர்கள் சமூகமளிக்காத காரணத்தால் நிகழ்ச்சி நிரலில் அடுத்த விடயத்திற்கு செல்வோம் எனத் தெரிவித்தார்.

நிகழ்ச்சி நிரலில் அடுத்து உபகுழுக்களின் சிபார்சுகள். குறித்த சிபார்சில் 03.08.2022 ஆம் திகதிய தொழிநுட்பக் குழுக் கூட்ட சிபார்சகள் சபையில் காட்சிப்படுத்தப்பட்டு சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/02**
தொழில்நுட்பக் குழு சிபார்சுக்கமைவாக வட்டாரம் 3 வீதி புனரமைப்பு வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 46,618.00 வினை Nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/03**
தொழில்நுட்பக் குழு சிபார்சுக்கமைவாக வட்டாரம் 5 வீதி புனரமைப்பு வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,930.00 வினை Nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/04**
தொழில்நுட்பக் குழு சிபார்சுக்கமைவாக வட்டாரம் 7 வீதி புனரமைப்பு வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 948,013.21 மட்டும் Nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/05**
தொழில்நுட்பக் குழு சிபார்சுக்கமைவாக வட்டாரம் 8 கட்டம் II வீதி புனரமைப்பு வேலைக்கான முதலாவது பகுதிக்கொடுப்பனவு ரூபா 1,910,840.40 மட்டும் Nation Construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/06**
தொழில்நுட்பக் குழு சிபார்சுக்கமைவாக வட்டாரம் 9 வீதி புனரமைப்பு வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 1,088,376.00 மட்டும் Nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 06. விடயம் யூலை மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கையினை சபை அங்கீகரித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/06**
யூலை மாதம் அனுமதிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான கீழ்வரும் அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - ஆடி - 2022 | | | | | |
|---|---|---|---|---|---|
| கொக்குவில் உப அலுவலகம் | | | | | |
| இல | வி.இல | பெயர் | முகவரி | கட்டட விபரம் | அ. திகதி |
| 1 | K/68/2022 | நா.துரைராசா | ஆலடி வீதி | மதில் & Gate | 22.07.2022 |
| 2 | K/75/2020 | செ.கஸ்தூரி | கேணியடி ஒழுங்கை | COC - வீடு | 22.07.2022 |
| 3 | K/52/2022 | மா.ரஜனி | ஆசாரியர் லேன் | வீடு | 22.07.2022 |
| 4 | K/51/2022 | சி.லேகா | முத்தட்டுமடம் லேன் | 2 மாடி வீடு | 29.07.2022 |
| 5 | K/220/2021 | உ.கமலாஜனி | கமட்டன் லேன் | திருத்தம் மாடி வீடு | 29.07.2022 |
| 6 | K/230/2019 | ஞா.கிருபாகரன் | புகையிரத நிலைய வீதி | திருத்தம் மாடி வீடு | 29.07.2022 |

| அனுமதியளிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான அறிக்கை - ஆடி - 2022 | | | | | |
|---|---|---|---|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | | | | | |
| இல | வி. இல | பெயர் | முகவரி | கட்டட விபரம் | அ. திகதி |
| 1 | N/163/2021 | ப.சிவகௌரி | ஆடியபாதம் வீதி | மதில் | 22.07.2022 |
| 2 | N/30/2021 | பா.சதீஷ் | புதிய செம்மணி வீதி | 2 மாடி வீடு | 22.07.2022 |
| 3 | N/99/2021 | த.யோகரட்ணம் | நாவலடி ஒழுங்கை | மதில் | 22.07.2022 |
| 4 | N/75/2021 | ற.மேரிகுமுதினி | முள்ளி வீதி | திருத்தம் மாடி வீடு | 29.07.2022 |

நிகழ்ச்சி நிரலில் 07வது விடயம் யூலை மாத கொடுப்பனவுகளுக்கு சபை அனுமதி பெறல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/07**

யூலை மாத கீழ்வரும் கொடுப்பனவுகளுக்கு சபை தழுவு அனுமதிவழங்குவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| | Date | Cash Book 162-1001-00000-920<br>Details - July 2022 | Cash | XE |
|---|---|---|---|---|
| G/1 | 7 | கே பாலசுப்பிரமணியம் | 52,200.00 | |
| G/2 | | ஏ கிருபாகரன் | 8,630.00 | |
| G/3 | | பி டில்சன் | 7,504.75 | |
| G/4 | | ரட்னம் எரிபொருள் நிரப்பு நிலையம் | 59,800.00 | |
| G/5 | | நளின் இன்போமேசன் | 3,500.00 | |
| G/6 | | ஆர்க் என்ரபிறைசஸ் | 33,000.00 | |
| G/7 | | கே ஏ சின்னையா அன் சன் | 52,500.00 | |
| G/8 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | 4,160.00 | |
| | | | **221,294.75** | - |
| G/9 | 8 | பொற்பதி சசநி | 632,256.00 | |
| | | | **632,256.00** | - |
| | | | **221,294.75** | - |
| | | | **853,550.75** | - |
| G/10 | 12 | நேசன் பில்டேஸ் | 28,689.69 | |
| G/11 | | யசோ இஞ்சினியேஸ் | 86,463.50 | |
| G/12 | | யசோ இஞ்சினியேஸ் | 92,907.82 | |
| G/13 | | நியூ ஜெனரேசன் பில்டேஸ் | 89,579.12 | |
| G/14 | | சிற்றி மெடிக்கல் | 23,710.00 | |
| G/15 | | பொமு முகாமையாளர் இலங்கை போக்குவரத்து சபை | 103,960.00 | |
| | | | **425,310.13** | - |
| | | | **853,550.75** | - |
| | | | **1,278,860.88** | - |
| G/16 | 19 | பொது முகாமையாளர் பநோ கூ ச | 204,600.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| G/17 | | பொமு முகாமையாளர் இலங்கை போக்குவரத்து சபை | 66,000.00 | |
| | | | **270,600.00** | **-** |
| | | | **1,278,860.88** | **-** |
| | | | **1,549,460.88** | **-** |
| G/18 | 20 | பொது முகாமையாளர் பநோ கூ ச | 118,365.00 | |
| G/19 | | செயலாளர் பி ச நல்லூர் | 1,500.00 | |
| G/20 | | நேசன் பில்டேஸ் | 207,023.21 | 12,000.00 |
| G/21 | | நேசன் பில்டேஸ் | 856,934.36 | 51,751.20 |
| G/22 | | சக்தி இஞ்சினியரிங் | 5,973,553.75 | 340,456.25 |
| G/23 | | செயலாளர் பி ச வலி வடக்கு | 351,440.00 | |
| G/24 | | குரு பிறின்டேஸ் | 4,700.00 | |
| G/25 | | ஸ்ரார் அட்வெடிசிங் | 4,000.00 | |
| G/26 | | ஸ்ரார் அட்வெடிசிங் | 1,250.00 | |
| G/27 | | பொமு முகாமையாளர் இலங்கை போக்குவரத்து சபை | 17,600.00 | |
| G/28 | | வலம்புரி | 2,250.00 | |
| G/29 | | ஏசியன் மீடியா | 2,700.00 | |
| G/30 | | ஏசியன் மீடியா | 1,800.00 | |
| G/31 | | சிறீலங்கா ரெலிகொம் | 3,129.25 | |
| | | | **7,546,245.57** | **404,207.45** |
| | | | **1,549,460.88** | **-** |
| | | | **9,095,706.45** | **404,207.45** |
| G/32 | 22 | செயலாளர் பொற்பதி சசநி | 30,972.00 | |
| G/33 | | எஸ் சிவானுயன் | 5,709.75 | |
| G/34 | | செல்வா எலக்ரிக்கல்ஸ் | 3,760.00 | |
| G/35 | | வி இளங்கோ | 1,183.14 | |
| G/36 | | கே ஜெகதீசன் | 4,000.00 | |
| G/37 | | ஆணையாளர் யாழ் மநகரசபை | 15,000.00 | |
| G/38 | | கே சேனாதிராசா | 2,600.00 | |
| G/39 | | கே சேனாதிராசா | 1,200.00 | |
| G/40 | | எஸ் நடேசு | 600.00 | |
| G/41 | | எஸ் நடேசு | 600.00 | |
| G/42 | | இலங்கை மின்சார சபை | 93,446.70 | |
| G/43 | | பிரதி மாகாண பணிப்பாளர் விவசாயம் | 1,000.00 | |
| | | | **160,071.59** | **-** |
| | | | **9,095,706.45** | **404,207.45** |
| | | | **9,255,778.04** | **404,207.45** |
| G/44 | 25 | மாபிள் சிவில் கென்ஸ்ரக்சன் | 246,676.64 | |
| G/45 | | கமலினி மகேந்திரன் நீதன் றில்லிங் | 467,500.00 | |
| G/46 | | ரட்னம் எரிபொருள் நிரப்பு நிலையம் | 66,000.00 | |
| G/47 | | பொது முகாமையாளர் பநோ கூ ச | 82,800.00 | |
| G/48 | | பொது முகாமையாளர் பநோ கூ ச | 341,880.00 | |
| | | | **1,204,856.64** | **-** |
| | | | **9,255,778.04** | **404,207.45** |
| | | | **10,460,634.68** | **404,207.45** |
| G/49 | 26 | எஸ் சுதாகரன் | 36,800.00 | |
| G/50 | | பாபா சிவில் இஞசினியரிங் | 271,581.30 | |
| G/51 | | விழியரசி கென்ஸ்ரக்சன் | 73,867.93 | |
| G/52 | | சந்திரா பாதுகாப்பு சேவை | 151,997.50 | |
| G/53 | | சிறீலங்கா இன்சுரன்ஸ் | 9,357.20 | |
| G/54 | | ஏ கிருபாகரன் | 8,285.04 | |
| G/55 | | எஸ் கோகுலசுதன் | 6,420.00 | |
| G/56 | | பா டில்சன் | 7,845.99 | |

| | | | | |
|---|---|---|---|---|
| G/57 | | எஸ் சுதாகரன் | 7,150.00 | |
| G/58 | | கே ரகு | 7,659.75 | |
| G/59 | | எம் தீபன் | 1,950.00 | |
| | | | **582,914.71** | **-** |
| | | | **10,460,634.68** | **404,207.45** |
| | | | **11,043,549.39** | **404,207.45** |
| G/60 | 27 | ரி சுதர்சினி மற்றும் ஏனையோர் | 1,220,000.00 | |
| G/61 | | என் தவராசா | 282,727.20 | |
| | | | **1,502,727.20** | **-** |
| | | | **11,043,549.39** | **404,207.45** |
| | | | **12,546,276.59** | **404,207.45** |
| G/61 | 28 | பிரதம கணக்காளர் இலங்கை புகையிரதத்திணைக்களம் | 20,400.00 | |
| G/62 | | செல்வா எலக்ரிக்கல் | 3,285.00 | |
| G/63 | | பி விசாகன் | 3,140.00 | |
| G/64 | | இலங்கை மின்சார சபை | 5,751.90 | |
| G/65 | | சிறீலங்கா ரெலிக்கொம் | 15,193.00 | |
| G/66 | | ஏசியன் மீடியா | 17,250.00 | |
| G/67 | | ஆர்க் என்ரபிறைசஸ் | 196,200.00 | |
| G/68 | | கோல்டன் ஈகிள் | 77,805.00 | |
| G/69 | | செல்வா எலக்ரிக்கல் | 1,747,168.00 | |
| G/70 | | ஆணையாளர் மாநகரசபை | 2,700.00 | |
| | | | **2,088,892.90** | **-** |
| | | | **12,546,276.59** | **404,207.45** |
| | | | **14,635,169.49** | **404,207.45** |

| | **Cash Book 1095945 - July 2022** | | | |
|---|---|---|---|---|
| Vno | **Date** | **Details** | Cash | XE |
| SA/01 | 21 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 5,345,509.36 | |
| | | ஓய்வூதிய திணைக்களம் | 246,969.98 | |
| | | தேசிய காப்புறுதி நிதியம் | 29,850.00 | |
| | | செலிங்கோ இன்சுரன்ஸ் | 3,738.00 | |
| | | இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 5,606.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 530,559.06 | 19,431.73 |
| | | | 6,162,232.40 | 19,431.73 |
| SA/2 | 22 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 670,784.00 | |
| | | செயலாளர் மற்றும் கணக்காளர். ஓய்வூதிய திணைக்களம் | 28,341.00 | |
| | | தேசிய காப்புறுதி நிதியம் | 2,350.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | | 375.00 |
| | | | **701,475.00** | **375.00** |
| | | | **6,162,232.40** | **19,431.73** |
| | | | **6,863,707.40** | **19,806.73** |
| SA/3 | 26 | முகாமையாளர், இலங்கை வங்கி திருநெல்வேலி | 134,890.00 | |
| | | முகாமையாளர், கொமர்சியல் வங்கி திருநெல்வேலி | 97,750.00 | |
| | | முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி | 13,750.00 | |
| | | முகாமையாளர், மக்கள் வங்கி திருநெல்வேலி | 14,000.00 | |
| | | செயலாளர் பிரதேச சபை நல்லூர் | 3,980.00 | |
| | | நலன்புரிச் சங்கம் | 14,850.00 | |
| | | இலங்கை தமிழரசுக் கட்சி | 4,000.00 | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தமிழ்தேசிய மக்கள் முன்னனி நிதியம் | 2,000.00 | |
| | | முகாமையாளர், ஹற்றன் நசனல் வங்கி திருநெல்வேலி | 14,780.00 | |
| | | | **300,000.00** | **-** |
| | | | **6,863,707.40** | **19,806.73** |
| | | | **7,163,707.40** | **19,806.73** |

| Cash Book 0089003009-July 2022 | | | | |
|---|---|---|---|---|
| Vno | **Date** | **Details** | Cash | XE |
| LDSP/1 | 1 | மாபிள் கென்ஸ்ரக்சன் | 2,055,638.63 | |
| | | | **2,055,638.63** | **-** |
| LDSP/2 | 7 | எஸ்ரிஎஸ் சிவில் இஞ்சினியரிங் | 403,394.45 | 4,748.46 |
| | | | **403,394.45** | **4,748.46** |
| | | | **2,055,638.63** | **-** |
| | | | **2,459,033.08** | **4,748.46** |

**தீர்மானம் 12.08.2022/08**

வட்டாரம் 09 வீதி வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 286,551.86 ஐ Nation builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/09**

வட்டாரம் 08 கட்டம் 11 வீதி வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 2,016,296.48 ஐ Nation construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/10**

Renovation of concert Road வீதி வேலைக்கான இறுதிக்கொடுப்பனவு ரூபா 109,254.82 ஐ Shakthy Engineering ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/11**

நிதிக்குழு மற்றும் திட்டமிடல் குழுவின் சிபார்சின் அடிப்படையில் காரைக்கால் திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தினை அடுத்து எதிர் காலத்தில் இவ்வாறான அனா்த்தங்கள் நிகழ்வதை தடுக்கும் நோக்கில் குறித்த நிலையத்தில் உடனடியாக குழாய் கிணறு ஒன்றினை அமைத்து அதற்கான கொடுப்பனவினை வழங்குவதற்கு சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/12**

LDSP வேலைத்திட்டத்தின் PT – 01 வேலைக்கான முதலாவது பகுதிக்கொடுப்பனவிற்கான Vat 91,731.55 ஐ nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/13**

LDSP வேலைத்திட்டத்தின் BT – 03 வேலைக்கான 1st Part Payment 2,633,094.58 வினை kones civil work construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினா் திருமதி.ர.கோமதி அவா்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினா் திரு.தெ.கிரிதரன் அவா்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/14**
LDSP வேலைத்திட்டத்தின் BT – 02 வேலைக்கான 7th Part Vat Payment 158,874.23 Mapil Civil construction ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 08 வது விடயம் யூலை மாத வருமான செலவு அறிக்கை சமர்ப்பித்தல். குறித்த அறிக்கை சபையில் காட்சிப்படுத்தப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/15**
யூலை மாத வருமான செலவு அறிக்கையினை சபை அங்கீகரிப்பதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சி நிரலில் 09வது விடயமான ஏனையவையில் LDSP திட்டத்தின் கீழ் கொக்குவில் பொதுச்சந்தையில் அமைக்கப்பட்டு வந்த கடைத்தொகுதியின் வேலைகள் நிறைவடைந்துள்ளன. தற்போது கடையின் வாடகை தொடர்பாக விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. குறித்த விலை மதிப்பீடானது கிடைக்கப்பெற்றதும் 20வருட வாடகைப்பணத்தினை கீ மணியாகக் கொண்டு பகீரங்கமாக கேள்வி கோருவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/16**
கொக்குவில் பொதுச் சந்தையில் LDSP திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட கடைத்தொகுதிக்கான மதிப்பீடானது விலைமதிப்பீட்டுத் திணைக்களத்திடமிருந்து கிடைக்கப்பெற்றதும் பகீரங்கமாக கேள்வி கோரி 20 வருட வாடகைப்பணத்தினை Key money ஆகக் கொண்டு ஏல முறையில் வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது சபைக்குட்பட்ட 7 மயானங்களுக்கும் மயானப் பாதுகாப்பு மற்றும் தகன சேவைக்கான ஆளணி இன்மை காரணமாக தனியார் சேவையிடமிருந்து கேள்வி கோரல் மூலமாக வெளிவாரி அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/17**
எமது மயானங்களின் மயானப் பாதுகாப்பு மற்றும் தகன சேவைக்கான ஆளணி போதாமையால் தனியார் சேவையிடமிருந்து கேள்வி கோரல் மூலமாக வெளிவாரி அடிப்படையில் தொழிலாளர்களை பெற்றுக்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து திருநெல்வேலிச்சந்தையின் சுத்திகரிப்பு வேலைக்கான ஒப்பந்தமானது சேவை சீரின்மை காரணமாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. அச்சேவையினை பொற்பதி சனசமூக நிலையம் ஊடாக நாளாந்தம் 8 ஊழியர்களை அமர்த்துவதற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/18**
திருநெல்வேலிச்சந்தையின் சுத்திகரிப்பு சேவையினை வழங்கிய நிறுவனத்தின் ஒப்பந்தமானது சேவை சீரின்மை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளமையால் குறித்த சேவையினை பொற்பதி சனசமூகநிலையம் ஊடாக 8 தொழிலாளர்களை நாளாந்தம் வேலைக்கு அமர்த்தி சுத்திகரிப்பு மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் மு.ப 10.05 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து திருநெல்வேலி வாழைக்குலைச் சந்தை அருகில் உள்ள சபைக் காணியில் அமைந்துள்ள வீட்டை திருநெல்வேலி ஆரம்ப சுகாதார வைத்தியசாலை தேவைக்கு வாடகைக்கு வழங்க சபை அனுமதியினைக் கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/19**
திருநெல்வேலி வாழைக்குலைச் சந்தைக்கு அருகில் சபைக் காணியில் அமைந்துள்ள வீட்டை திருநெல்வேலி ஆரம்ப சுகாதார வைத்தியசாலை தேவைக்கு வாடகைக்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து வளர்ப்பு நாய்களுக்கான ஊசி ஏற்றல் நிகழ்ச்சித்திட்டம் - 2022 ற்கான மேலதிக நேரக் கொடுப்பனவினை வழங்க சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/20**
வளர்ப்பு நாய்களுக்கான ஊசி ஏற்றல் நிகழ்ச்சித்திட்டம் - 2022 ற்கான வேலைத்திட்டத்தில் கடமையாற்றிய திரு.மு.தீபன் - சுகாதாரத்தொழிலாளி அவர்களுக்கான மேலதிக நேரக் கொடுப்பனவு ரூபா 9843.74 ஐ வழங்குவதற்கு சபை அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.இ.இராசலிங்கம் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து ஊரடங்கு மற்றும் பணிப்புறக்கணிப்பு காலத்தில் திருநெல்வேலிச்சந்தை திறக்கப்படவில்லை எனவும் குறித்த காலத்தில் 03.04.2022, 28.04.2022, 06.05.2022, 10.05.2022, 11.05.2022 ஆகிய 05 நாட்கள் சந்தை இயங்காமைக்கான விலைக்கழிவினை குத்தகைதாரர் கோரியுள்ளார். குறித்த சந்தை இயங்காத நாட்களுக்கு விலைக்கழிவு வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதைத் தொடர்ந்து குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/21**
நாட்டில் அமுல்படுத்தப்பட்ட ஊரடங்கு மற்றும் பணிப்புறக்கணிப்பு காரணமாக திருநெல்வேலி சந்தையின் வியாபார நடவடிக்கைகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு கீழ்வரும் பட்டியலுக்கமைவாக 03.04.2022, 28.04.2022, 06.05.2022, 10.05.2022, 11.05.2022 ஆகிய 05 நாட்கள் இயங்காமைக்கான சந்தைக்குத்தகைத் தொகை ரூபா 399,561.13 ஐ கௌரவ ஆளுநர் அனுமதி பெற்று விலக்கழிப்பு செய்வதென கௌரவ உறுப்பினர் திருசெ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌவர உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| திருநெல்வேலிச்சந்தையின் மாதாந்த குத்தகை | இயங்காத காலப்பகுதி | காரணம் | இயங்காத நாட்கள் | கழிவுகோரும் தொகை |
|---|---|---|---|---|
| 2,444,683.25 | 03.04.2022<br>28.04.2022 | ஊரடங்கு<br>பணிப்புறக்கணிப்பு | 02 | 162,978.88 |
| | 06.05.2022<br>10.05.2022<br>11.05.2022 | பணிப்புறக்கணிப்பு<br>ஊரடங்கு<br>ஊரடங்கு | 03 | 236,582.25 |
| | **மொத்தம்** | | | **399,561.13** |

ஏனைய விடயத்தில் அடுத்து சுகாதாரத்தொழிலாளியாகக் கடமையாற்றும் திரு.இ.சிவரூபன் அவர்களுக்கு செம்ரெம்பர் மாதம் இடர்கடன் வழங்க சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/22**
செப்ரெம்பர் மாதம் கீழ்வரும் ஊழியருக்கு இடர்கடன் வழங்க சபை அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- திரு.இ.சிவரூபன் - 250,000.00

கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் மு.ப. 10.10 மணியளவில் சபையிலிருந்து வெளியேறினார்.

ஏனைய விடயத்தில் அடுத்து மழைகாலம் நெருங்குவதால் வாய்க்கால்கள் தூர்வாரும் வேலைத்திட்டம் விரைவாக மேற்கொள்ள வேண்டிய தேவையுள்ளது. கடந்த வருடம் இயந்திர வலு மூலம் தூர்வாருதல் வேலைதிட்டமானது நடைபெற்றது. அதில் 50% வேலைகளே மேற்கொள்ள சாத்தியப்பட்டது. தற்போதைய சூழ்நிலையில் எரிபொருள் பிரச்சனை காரணமாக இயந்திர வலுவை விடுத்து இம்முறை 30 மனித வலு மூலம் தூர் வாருதல் மேற்கொள்வதாகவும் அதற்காக 10 ஊழியருக்கு ஒரு தொழில்நுட்ப உத்தியோகத்தர் வீதம் 3 பிரிவாக பிரித்து அக்குழுவின் வேலையின் அளவு மற்றும் வேலை மதிப்பீடு ஆகியன தொழில்நுட்ப உத்தியோகத்தரின் கீழ் தூர்வாருதல் நடவடிக்கை மேற்கொள்ளவள்ளதாகவும் குறித்த 30 தொழிலாளர்களை பொருத்தமான சனசமூகநிலையத்திடமிருந்து பெற்று 3 மாதங்களுக்கு அல்லது பெற்று தூர்வாருதல் நடவடிக்கை நிறைவுபெறும் வரை வேலை மேற்கொள்ள சபை அனுமதியினை கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/23**

வாய்க்கால்கள் தூர்வாருதல் வேலைக்கு பொருத்தமான சனசமூகநிலையத்திடமிருந்து 3 மாதங்களுக்கு அல்லது குறித்த வேலை நிறைவடையும் வரை 30 தொழிலாளர்களை வெளிவாரி அடிப்படையில் பெற்று குறித்த தூர்வாருதல் வேலையினை மேற்கொள்வதென கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.க.குகானந்தன் அவர்கள் மு.ப 10.15 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.தா.தியாகமூர்த்தி அவர்கள் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்காக 05.08.2022 – 15.08.2022 வரை கொழும்பு செல்லவுள்ளதால் குறித்த காலத்திற்கு விடுமுறை வழங்குமாறு கடிதமூலமாக கோரிக்கை சமர்ப்பித்துள்ளார். கௌரவ உறுப்பினர்களான திருமதி.சு.வாசுகி மற்றும் செல்வி.கு.பிரிந்தா, கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா, கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் ஆகியோர் சுகயீனம் காரணமாக இன்றைய சபைக்கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என தொலைபெசி மூலமாக அறிவித்துள்ளனர் எனத் தெரிவித்து குறித்த விடுமுறைக்கான சபை அனுமதியினை கோரிய போது கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/24**

எமது கௌரவ உறுப்பினர்களான திரு.தா.தியாகமூர்த்தி, திருமதி.சு.வாசுகி, செல்வி.கு.பிரிந்தா, திருமதி.சி.கௌசலா மற்றும் கௌரவ உபதவிசாளர் திரு.இ.ஜெயகரன் ஆகியோர் சுகயீனம் காரணமாக இன்றைய (12.08.2022) கூட்டத்திற்கு சமூகமளிக்க முடியவில்லை என அறியத்தந்துள்ளமையினை கௌரவ சபை ஏற்று அவர்களது விடுமுறைக்கான அனுமதியினை வழங்குவதாக கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து எமது கொக்குவில் உப அலுவலகத்திற்கும் கொக்குவில் நூலகத்திற்கும் இடையில் அமைந்துள்ள கொக்குவில் ஆரம்ப வைத்தியசாலைக்கு தற்போது புதிதாக இடமாற்றத்தில் வருகை தந்துள்ள வைத்தியர் வைத்தியசாலைக்கு அருகிலுள்ள வாய்க்காலினை புனரமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளார். குறித்த வாய்க்கால் புனரமைப்பு தொடர்பாக கௌரவ தவிசாளர் அவர்களால் சபையிடம் ஆலோசனை கோரிய போது குறித்த விடயம் சபையில் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/25**

கொக்குவில் வைத்தியசாலைக்குரிய ஆதன ஆவணங்களை சரிபார்த்து எமக்குரிய ஆதனமாக இருப்பின் அதனை புனரமைப்பு செய்வதென கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் மு.ப. 10.20 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

அதனைத்தொடர்ந்து கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் ஏனைய விடயத்தில் கருத்துரைக்கையில் கடந்த மாதம் காரைக்கால் திண்மக்கழிவகற்றல் நிலையத்தில் ஏற்பட்ட தீ விபத்தின் போது குறித்த இடத்திற்கு வருகை தந்து மண்ணெண்ணெய் வழங்கி உதவிய கௌரவ உறுப்பினர் திரு.க.முருகையா மற்றும் கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா ஆகியோருக்கு நன்றிகளைத் தெரிவிப்பதோடு உயிராபத்து ஏற்படாது செயற்பட்ட கௌரவ உறுப்பினர் திரு.பார்த்தீபன் அவர்களுக்கும் நன்றிகளை தொரிவித்ததடன் ஏனைய சபைகளிலிருந்து வருகை தந்திருந்த கௌரவ தவிசாளர்கள் மற்றும் உறுபபினர்களுக்கும் அத்துடன் கோப்பாய் இராணுவத்தினர் ஆகியோருக்கும் மற்றும் அன்றைய தினம் உதவிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் குறித்த அனர்த்தம் தொடர்பாக அறிக்கையினை சபைக்கு தெரிவித்ததுடன் அன்றைய தினம் பங்காற்றிய எமது சபையின் கௌரவ உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வலிதென்மேற்கு பிரதேசசபை, வலி வடக்கு பிரதேசசபை, வலி கிழக்கு பிரதேசசபை, அத்துடன் தீயணைப்பு வாகனத்தை வழங்கிய கரைச்சி பிரதேசசபை தவிசாளர், மற்றும் கோப்பாய் பொலிஸ் படைவீரர்கள், பலாலி இராணுவத்தினர் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளை தெரிவித்ததுடன் எமது வெளிவாரி ஊழியர்கள் அயராது அர்ப்பணிப்புடன் பாடுபட்டுள்ளனர். அத்துடன் பெண்ணாக இருந்தும் அர்ப்பணிப்புடன் செயலாற்றிய கௌரவ உறுப்பினர் திருமதி.சி.கௌசலா அவர்களுக்கும் சுகாதார மேற்பார்வையாளர் திரு.க.ஜெகதீஸ் அவர்களுக்கும் மற்றும் குறித்த பிரதேச மக்கள், உதவி புரிந்த அயலவர்கள் அவ்விடத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார்கள். இதில் யாரும் விடுபட்டிருப்பின் அவர்களுக்கும் சபை சார்பாக நன்றிகளைத் தெரிவித்தார்.

அடுத்து கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் ஏற்கனவே தூர் வாருதலுக்கு தம்மால் கோரியிருந்த வாய்க்காலுக்கான கடிதம் கடந்த முதலாம் திகதி வழங்கப்பட்டுள்ளது எனவும் அதனை விரைவாக தூர்வாருவதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் பருவ மழை காலம் வருவதற்கு முன்னர் செப்ரெம்பர் முதல் வாரம் அளவில் குறித்த வேலைகள் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனத் தெரிவித்தார்.

கௌரவ உறுப்பினர் செல்வி.வி.சிந்துஜா அவர்கள் மு.ப. 10.30 மணியளவில் சபைக்கூட்டத்திற்கு சமூகமளித்தார்.

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.செ.சிவலோசன் அவர்கள் கருத்துரைக்கையில் வடமாகாணத்தில் ஒரு சில சபைகளில் மட்டுமே தீயணைப்பு வாகனம் உள்ளது எனவும் எனது சபைக்கும் ஒரு தீயணைப்பு வாகனம் பெறுவதற்கு உறுப்பினர்கள் தீர்மானம் எடுக்கலாம் என்பது தமது கருத்தாகும் எனத் தெரிவித்தார்.

அதற்கு பதிலளித்த கௌரவ தவிசாளர் அவர்கள் இதனை அடுத்த கூட்டத்தில் பிரேரணையாக தாருங்கள் சபையில் திர்மானமாக எடுப்போம் எனத் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து 2022ஆம் ஆண்டுக்கான வட்டார வீதி புனரமைப்பில் வட்டாரம் 8 கட்டம் 1 வீதிகளில் ஆடியபாதம் 5ஆம் குறுக்குவீதி புனரமைப்பு செய்ய முற்பட்ட வேளை அப்பகுதி மக்கள் குறித்த வீதியை புனரமைப்பு செய்ய வேண்டாம் என எதிர்ப்பு தெரிவித்ததை தொடர்ந்து அவ்வீதிக்கு பதிலாக கேணியடி வீதி குறுக்கு ஒழுங்கை தெரிவு செய்யப்பட்டு புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று வட்டாரம் 8 கட்டம் 11 வீதிகளில் காலாசாலை 13ஆம் குறுக்கு வீதியும் மக்களின் எதிர்ப்பு காரணமாக நிறுத்தப்பட்டு அதற்கு பதிலாக கலாசாலை வீதி வடக்கு குறுக்கு ஒழுங்கை புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. குறித்த இரு வீதிகளும் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளும் போது வீதிகளின் நீள அகல பௌதீக மாற்றங்கள் காரணமாக Veration குறித்த வீதிகளில் ஏற்பட்டுள்ளது. எனவே குறித்த் புனரமைப்பில் வீதிகளில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் அவ்வாறு மாற்றம் ஏற்பட்டமையால் ஏற்பட்ட

Veration ஏற்பட்ட மேலதிக கொடுப்பனவு வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/26**

2022ஆம் ஆண்டுக்கான வட்டார வீதி புனரமைப்பில் வட்டாரம் 8 கட்டம் 1 வீதிகளில் ஆடியபாதம் 5ஆம் குறுக்குவீதி புனரமைப்பிற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவ்வீதிக்கு பதிலாக கேணியடி வீதி குறுக்கு ஒழுங்கையினை மாற்றி புனரமைப்பு செய்வதற்கும் குறித்த வீதியின் நீள அகலத்தில் ஏற்பட்ட பௌதீக மாற்றம் காரணமாக Veration வேலையினை நிறைவேற்றுவதற்கும் சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/27**

2022ஆம் ஆண்டுக்கான வட்டார வீதி புனரமைப்பில் வட்டாரம் 8 கட்டம் 11 வீதிகளில் காலாசாலை 13ஆம் குறுக்கு வீதி புனரமைப்பிற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவ்வீதிக்கு பதிலாக கலாசாலை வீதி வடக்கு குறுக்கு ஒழுங்கையினை மாற்றி புனரமைப்பு செய்வதற்கும் குறித்த வீதியின் நீள அகலத்தில் ஏற்பட்ட பௌதீக மாற்றம் காரணமாக Veration வேலையினை நிறைவேற்றுவதற்கும் சபை தழுவு அனுமதி வழங்குவதாக கௌரவ உறுப்பினர் கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

ஏனைய விடயத்தில் அடுத்து 2021ஆம் ஆண்டுக்கான 2ஆம் கணிப்பீட்டுச்சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவினை வழங்குவதற்கு கௌரவ தவிசாளர் அவர்களினால் சபையிடம் அனுமதி கோகரியதை தொர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/28**

2021ஆம் ஆண்டுக்கான 2ஆம் கணிப்பீட்டுச்சபை உறுப்பினர்களுக்கான கீழ்வரும் கொடுப்பனவினை வழங்குவதற்கு சபை அனுமதி வழங்கவதாக கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.செ.சச்சிதானந்ததேவி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| இரண்டாம் கணிப்பீட்டுச் சபை நடவடிக்கை – 27.04.2022 | | | | |
|---|---|---|---|---|
| **இல** | **பெயர்** | **பதவி** | **குழு** | **தொகை** |
| 01 | திருமதி.N. தயானி | அபிவிருத்தி உத்தியோகத்தர் பி/உ.உ.ஆ.அலுவலகம் | தலைவர் | 1000.00 |
| 02 | திரு.வ.மயில்வாகனம் | வருமானப்பரிசோதகர், நல்லூர் பிரதேசசபை | உறுப்பினர் | 750.00 |
| 03 | திரு.ச.விஜயகுமாரன் | கௌரவ உறுப்பினர், நல்லூர் பிரதேசசபை | உறுப்பினர் | 750.00 |
| **இரண்டாம் கணிப்பீட்டுச் சபை நடவடிக்கை – 16.08.2022** | | | | |
| 01 | திருமதி.N. தயானி | அபிவிருத்தி உத்தியோகத்தர் பி/உ.உ.ஆ.அலுவலகம் | தலைவர் | 1000.00 |
| 02 | திரு.வ.மயில்வாகனம் | வருமானப்பரிசோதகர், நல்லூர் பிரதேசசபை | உறுப்பினர் | 750.00 |
| 03 | திரு.ச.விஜயகுமாரன் | கௌரவ உறுப்பினர், நல்லூர் பிரதேசசபை | உறுப்பினர் | 750.00 |

ஏனைய விடயத்தில் அடுத்து 2021ஆம் ஆண்டுக்குரிய வட்டார வீதி வேலைகளில் வட்டாரம் 8, வட்டாரம் 9, வட்டாரம் 12 வீதி வேலைகளுக்குரிய Vat கொடுப்பனவுகளை Nation Builders ற்கு வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/29**

2021ஆம் ஆண்டுக்குரிய வட்டார வீதி வேலைகளிற்குரிய கீழ்வரும் Vat கொடுப்பனவினை Nation Builders ற்கு வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.வ.ஸ்ரீகணேசா அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

| No | Details | ward | payment |
|---|---|---|---|
| | Renovation of ward base macadam Roads | ward – 4 | 123,930.54 |
| | Renovation of ward base macadam Roads | ward – 8 | 66,365.17 |
| | Renovation of ward base macadam Roads | ward – 9 | 58,380.36 |
| | Renovation of ward base macadam Roads | ward – 12 | 70,475.25 |

ஏனைய விடயத்தில் கௌரவ உறுப்பினர் திரு.கு.மதுசுதன் அவர்கள் கருத்துரைக்கையில் கடந்த அமைச்சரவையில் 3 பிரதேசசபைகள் தரமுயர்த்தப்பட்டுள்ளன. சிறப்பாக இயங்கி வரும் எமது சபை ஏன் தரமுயர்த்தப்படவில்லை என வினவிய போது கௌரவ தவிசாளர் அவர்களினால் எல்லை நிர்ணயம் தொடர்பாக நாம் எமது எல்லையினை விட்டுக்கொடுக்காமையும் காரணமாக இருக்கலாம் எனவும் குறித்த விடயம் தொடர்பாக ஞாபகமூட்டல் கடிதம் அனுப்புவோம் எனத் தெரிவித்ததுடன் எல்லைகளை விட்டுக்கொடுக்கும் சந்தர்ப்பத்தில் தரமுயர்த்தப்படும் என ஏற்கனவே நடைபெற்ற கலந்துரையாடல்களில் தெரிவிக்கப்பட்டது எனவும் தெரிவித்தார்.

ஏனைய விடயத்தில் அடுத்து LDSP BT – 2 வேலைத்திட்டத்தின் மேற்பார்வைச் செலவு ஒதுக்கீட்டிலிருந்து மேற்பார்வைக் கட்டணத்தை வழங்குவதற்கு சபையிடம் அனுமதி கோரியதை தொடர்ந்து கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/30**

LDSP BT – 2 வேலைத்திட்டத்தின் மேற்பார்வைச் செலவு ஒதுக்கீட்டிலிருந்து மேற்பார்வைக் கட்டணத்தை 07.04.2022ம் திகதிய 4th Provincial steering committee - LDSP கூட்ட குறிப்பின் தொடர் இலக்கம் 05வது தீர்மானத்திற்கமைவாக கீழ்க்குறிப்பிட்ட அட்டவணையின் அடிப்படையில் வழங்குவதென கௌரவ உறுப்பினர் திரு.க.திருஞானராசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திரு.தெ.கிரிதரன் அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மதிப்பீட்டுத்தொகை : 11,172,000.00
மேற்பார்வைச் செலவு ஒதுக்கீடு : 167,580.00

| **Designation** | **Name** | **Percentage** | **Amount** |
|---|---|---|---|
| Secretary of the LA | Mr.S.Sutharjan | 25% | 41,895.00 |
| Technical Officer - LA | Mr.S.Thayalan | 20% | 33,516.00 |
| Community Development Officer | Mr.S.Uthayaseelan | 10% | 16,758.00 |
| Procurement Officer - LA | Mrs.S.Sivasakthy | 10% | 16,758.00 |
| Finance Officer - LA | Mr.S.Suthakaran | 10% | 16,758.00 |
| Technical Officer - ACLG Office | Mr.J.Sakthijeevan | 15% | 25,137.00 |
| Subject Officer - ACLG Office | Mrs.J.Abarna | 10% | 16,758.00 |
| **Total** | | **100%** | 167,580.00 |

கௌரவ தவிசாளர் அவர்கள் ஏனைய விடயத்தில் கருத்துரைக்கையில் நல்லூர் கந்தசாமி கோயில் உற்சவம் தொடங்கி நடைபெற்று வருகின்றது. திருவிழா காலத்தில் செம்மணி வீதி இருள் சூழ்ந்து காணப்படுகின்றது எனவும் குறித்த மின்கம்பங்கள் வீதியின் வலி கிழக்கு பக்கமாக இருக்கின்றது எனவும் அவர்கள் அப்பகுதியில் மின் விளக்குகளை பொருத்தவில்லை எனவும் தெரிவித்து அவ்வீதியால்

ஆலயத்திற்கு சென்று வரும் மக்கள் இரவு நேரத்தில் பெரும் அசௌகரியமடைந்து வருகின்றனர் எனவும் குறித்த மின்கம்பங்களுக்கு மின்விளக்கு பொருத்துவதற்கு சபையிடம் ஆலோசனை கோரிய போது குறித்த விடயம் சபையால் ஆராயப்பட்டு கீழ்வருமாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**தீர்மானம் 12.08.2022/31**

நல்லூர் ஆலயத்தின் திருவிழாவின் போது செம்மணி வீதியூடாகச் பயணிக்கும் மக்கள் அவ்வீதியில் மின்விளக்குகள் இல்லாது இருள் சூழ்ந்துள்ளமையால் பெரும் அசௌகரியமடைவதனை கருத்தில் கொண்டு குறித்த வீதியிலுள்ள மின்கம்பங்கள் வலிகிழக்கு பகுதியில் இருப்பினும் அவர்கள் குறித்த மின்விளக்குகளை பொருத்தமையினால் அவ்வீதியால் பயணிக்கும் எமது மக்களின் நலன் கருதி அம்மின்கம்பங்களுக்கு மின்விளக்கினை பொருத்துவதென கௌரவ உறுப்பினர் திரு.வ.ஶ்ரீகணேசா அவர்கள் முன்மொழிய கௌரவ உறுப்பினர் திருமதி.ர.கோமதி அவர்கள் வழிமொழிய சபையால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களால் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றிகள் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து சபைக்கூட்டமானது மு.ப. 10.40 மணியளவில் நிறைவடைந்தது.

செயலாளர்,
நல்லூர் பிரதேசசபை